## வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை - 2021

---

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் ("கம்பனி") 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு முதல் 2022 வரையான நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SLFRS for SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தினால் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>கம்பனியால் பயன்படுத்தப்பட்ட கணனி சேவர் இயந்திரம் செயலிழந்தமையின் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது வைரஸ் தொற்றின் காரணமாக | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செயலிழந்திருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தின் போது தரவு மீள்சேமிப்பு (Backups) களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளப்படாமையின் காரணமாக கணக்குகள் தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் இல்லாதிருந்ததாக காண்பித்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஏப்ரல் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் அடிபப்டையில் இது தொடர்பாக 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தற்போதைய நிலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 உள்ளக கணக்காய்வு

கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள், விற்பனை துறைகளில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.1.1 பொருட் கொள்வனவு மற்றும் விற்பனை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது கம்பனியால் ரூபா 2,052,508,630 பெறுமதி உடைய இருப்பு, சீமெந்து, எஸ்பஸ்டஸ் ஓடுகள் மற்றும் ஏனைய மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், அந்த கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பதிவு செய்த வழங்குனர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரி கொள்வனவு செய்தலை உள்ளடக்கிய ஏனைய உரிய பெறுகை வழிகாட்டி கோவைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிறுவனத்திற்காக கொள்வனவு செய்யும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொருட்களை கொள்வனவு செய்யும் போது சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் பொருட் கட்டளை, பொருள் பெறுவனவுப் பத்திரம் போன்ற சான்றுகள் இணைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஆவணங்கள் உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் தேவையான துணை ஆவணங்கள் யாவும் இணைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொள்வனவு கட்டளை மற்றும் வழங்குனர்களிடம் இருந்தான பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட சரியான பொருட்களின் அளவு மற்றும் குறித்துரைத்த பொருட்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்களின் போது உடனடியாக அந்த பொருட்கள் நிராகரிக்கப்படல் வேண்டும். எனினும், சரியான பரீட்சிப்பின் பின்னர் சங்கராஜ மாவத்தையில் இலக்கம் 05 களஞ்சியம் மற்றும் கண்காட்சிக்கூட பொருட்களை கையேற்கும் போது நிராகரிக்கப்பட்டிருந்த பொருட்களுக்காக செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 1,446,908 ஆக இருந்தது. அந்த பொருட்களுக்காக வேறு பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிராகரிக்கப்பட வேண்டிய பொருட்களுக்கான கிரயம் குறைக்கப்பட்டதன் பின்னர் கொள்வனவுகளுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் கடனுக்கு கொள்வனவு செய்தல் மற்றும் காசுக்கு விற்பனை செய்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச விற்பனை நிலையங்களில் விற்பனை பட்டியல்கள் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதற்கு தலைமை அலுவலகத்திற்கான முறைமையோ அல்லது பிரதேச அலுவலகங்களின் மூலம் கணனி மயப்படுத்தப்பட்ட முறைமையில் தகவல்களை உள்ளடக்கும் திட்ட முறைமையுடன் உள்ளக கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்படாமை இதற்கான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பிரதேச விற்பனைகளையும் கணனி முறைமையில் உடனடியாக உள்ளடக்கக் கூடிய வகையில் சிறந்த மற்றும் போதியளவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு பொருட்கள் கொள்வனவு செய்யும் கொள்கையொன்று காணப்படாதிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் கம்பனியால் ஒரே ஒரு பொருள் விடயத்தில் பல்வேறு விலைகளின் கீழ் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனி கட்டிட பொருட்கள் வழங்குகின்ற பிரதான நிறுவனமாக இருந்தமையால் முறையான விலை கொள்கையொன்றை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2021 ஆம் ஆண்டில் ரூபா 84,747,128 பெறுமதியான விற்பனைப் பட்டியல்களில் 23 பத்திரங்களுக்காக மற்றும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 79,199,680 தொகையான 22 விற்பனை பட்டியல்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 163,946,808 பெறுமதியான 45 விற்பனை பட்டியல்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த பட்டியல்களுக்காக வழங்குனர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் நேரடியாக உரிய வேலைத் தளங்களுக்கு வழங்கப்பட்டமையினால் இரத்துச் செய்யப்பட்ட விற்பனை பட்டியல்களுக்காக வழங்குவதற்கு கட்டளையிடப்பட்ட பொருட்கள் கிடைத்திருந்ததா என சரியாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும், பொருட்கள் வழங்குவதாயின் அது வழங்கப்பட்ட பொருட்கள் கட்டளையில் குறிப்பிடப்பட்ட பொருட்களா எனவும், உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் மற்றும் இந்த கட்டளைகளுக்காக பணம் செலுத்தப்படாதிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பட்டியல்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், பொருட்கள் வழங்கப்பட்டிருந்தா என்பது தொடர்பாக சரியான மேற்பார்வையொன்று நடாத்தப்படல் வேண்டும். |

## 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக உறுதிப்படுத்துதல் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 900,230,005 ஆன பெறவேண்டிய தொகை மற்றும் வெளித்தரப்பினருக்கு தீர்த்து வைக்கப்பட வேண்டிய பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 2,715,100,080 ஆக இருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு பாதகமானதாக தாக்கமளிக்கக் கூடியதாக இருந்தமையால் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2004 சனவரி முதல் 2013 திசெம்பர் வரை ஊழியர் சேமலாப நிதியம் குறித்துரைத்த பிரகாரம் செலுத்தப்படாமையினால் நீதிமன்ற | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் பிரகாரம் பங்களிப்புப் பணம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளையின் அடிப்படையில் ரூபா 3,982,512 மிகைக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. அதனால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மாதாந்தம் ரூபா 50,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 2,250,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 1,732,512 மீதியொன்று செலுத்தவேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | மிகைக் கட்டணம் என்பன குறித்துரைத்த பிரகாரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியால் குறித்துரைத்த திகதிக்கு முன்னர் 2006 யூன் 16 ஆம் திகதிக்கு முன் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு உரித்தான பணிக்கொடை பணம் செலுத்துதலின் தாமதத்தின் காரணமாக நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் ரூபா 79,191 மிகை கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக் கொடை சட்டத்தின் பிரகாரம் தாமதமான பணிக் கொடை பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2007 செப்டம்பர் 27 ஆம் திகதிய அமப/07/1625/342/021 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி கொழும்பு 12, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு உரிய காணியில் இருந்து 100 பேர்ச் அளவினை உடைய நில பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையளிப்பதற்காக ரூபா 50 மில்லியன் முற்பண தொகை 2008 பெப்ரவரி 22 ஆம் திகதி கம்பனியால் வழங்கப்பட்டிருந்தது.<br><br>எனினும், 2012 ஆம் ஆண்டு வரை கையளித்தல் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், மீண்டும் 2012 மே 07 ஆந் திகதிய 12/0446/540/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 2007 செப்டம்பர் 27 ஆம் திகதி மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டமையால் பெறப்பட்ட முற்பண தொகை மீண்டும் செலுத்த வேண்டியிருந்தது. எனினும் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் கம்பனியால் எந்தவொரு தொகையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறப்பட்ட முற்பண தொகையை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிற்படு மூலதன தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் கம்பனியால் ரூபா 150 மில்லியன் குறுகிய கால கடன் 2017 மார்ச் 02 ஆம் திகதி முதல் 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 03 சந்தர்ப்பங்களின் போது மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை இலக்கம் 07 இன் பிரகாரம் பெறப்பட்ட கடன், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த கடன் தொகையை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் அல்லாமல் கம்பனியின் சம்பளம் செலுத்துதல், மிகை ஊதிய படி செலுத்துதல் போன்ற நிர்வாக செலவினங்களை உள்ளடக்கிய ஏனைய செலவினங்களுக்காக இந்த கடன் பணம் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>எனினும் இந்த கடன் தொகை குறித்துரைத்த பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்தமையால் 2021 யூலை 13 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் பணம் மற்றும் அட்டுறு வட்டியுடன் மொத்த நிலுவைப் பணம் ரூபா 185,336,680 ஆக இருந்ததுடன், அதற்காக செலுத்த வேண்டிய தண்டப் பணம் ரூபா 14,463,658 ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் கடன் பணத்தை பயன்படுத்தி கடனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்புக் கூறுதல் வேண்டும். |
| (ஆ) | நிதி நெருக்கடி எழுந்தமையால் நிர்மாண கைத்தொழில்களை வலுப்படுத்தும் தரப்பினருக்கு கம்பனிக்கு இயலுமான வகையில் திறைசேரி பிணையின் அடிப்படையில் 2018 மார்ச் 28 ஆம் திகதிய அமப/18/0504/736/00 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தில் இலங்கை வங்கியினால் ரூபா 500 மில்லியன் தொகை 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் அத்திகதி வரையில் இலங்கை வங்கிக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 199,052,329 தொகை குறைக்கப்பட்டு மிகுதி தொகை ரூபா 301,377,920 நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 35 சதவீதமான | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கடன் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகை அதாவது ரூபா 105,977,098 கடன் பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கு முரணாக செலவிடப்பட்ட ஊழியர் சம்பளம் செலுத்துதல், ஊழியர் சேமலாப / நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செலுத்துதல், கடன் வட்டி செலுத்துதல், மிகை ஊதியப் படி செலுத்துதல், மேலதிகப் பற்று செலுத்துதல், நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் என்பவற்றிக்காக செலவிடப்பட்டிருந்தன. இந்த ரூபா 500 மில்லியன் கடன் தொகையையும் இணங்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடன் வட்டி தொகை ரூபா 102,408,283 ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருள் முறைமை செயற்திறனாக இல்லாமையின் காரணமாக புதிய கணனி முறைமையொன்றை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது 05 நிறுவனங்களில் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டது. இதற்கான மாதிரிகள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த போதும், அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 மற்றும் 4.3.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிறுவனத்தால் மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரித்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 5.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பணம் செலுத்தும் போது காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையை பரீட்சித்து பெறுகைக் குழுவினால் தீர்மானம் எடுக்க வேண்டியிருந்த போதிலும், அந்த பிரிவுகளுக்கு இணங்காத வகையில் ரூபா 982,350 பொது முகாமையாளரின் அங்கீகாரத்தில் 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டி கோவைகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.5 வரி பிரமாணங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 செப்டம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட டைல் செயற்திட்டத்தின் மூலம் 2022 செப்டம்பர் வரை ரூபா 2,419,216,903 விற்பனை வருமானம் ஒன்று பெறப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரியின் அடிப்படையில் வரிச் சட்டத்தின் கீழ் அறவிட வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 55,889,608 உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட வரி தொகை உடனடியாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்கு சொந்தமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21 காணி கூறுகள் காணப்பட்டதுடன், அதில் கொழும்பு, மொரட்டுவை மாநகர சபைகளுக்குரிய காணிகள் தவிர ஏனைய காணிகளுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வீதவரி தொகை தொடர்பான தகவல்கள் கம்பனியிடம் காணப்படவில்லை. 2022 ஒக்டோபர் 25 ஆம் திகதிய கொழும்பு மாநகர சபையின் நகர திறைசேரி திணைக்களத்தின் கணக்காளர் (ஆதனவரி) இலக்கம் நாஹா/வரி/சங்ஸ்டா/25/2022 என்ற கடிதத்தின் பிரகாரம் கம்பனியால் 2021 திசெம்பர் 31 இல் கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய ஆதனவரி மற்றும் தண்டம் ரூபா 23,338,598 ஆக இருந்ததுடன், அதில் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 21,342,758 தொகையும், 2021 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,995,840 தொகையும் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய ஆதன வரி தொடர்பான விபரங்கள் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து விசாரணை செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேலும் மொரட்டுவை மாநகர சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய ஆதனவரி மீதி ரூபா 1,345,806 ஆக இருந்ததுடன், இதில் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் செலுத்த வேண்டிய ஆதனவரி ரூபா 1,164,771 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய ஆதனவரி உரிய காலப்பகுதியை உள்ளடக்கி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆகும்.

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவு | கம்பனியால் உழைக்கப்பட்ட நியாயமான இலாபம் / இலாபத்தின் அடிப்படையில் ஊழியர்களுக்கு மிகையூதிய படி செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக கம்பனி 2021 ஆம் ஆண்டிற்காக இலாபம் காணப்படுகின்றதா என தீர்மானிக்காமல் சுற்றறிக்கைக்கு புறம்பாக ஆண்டில் ஆண்டுகளில் மிகையூதிய படியாக ரூபா 1,105,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க இலாபம் பெறப்பட்டிருக்குமாயின் மாத்திரம் மிகையூதிய படி செலுத்த முடியும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தி மற்றும் 3.2.7 ஆம் பந்தி | ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை அடுத்துவரும் ஆண்டின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பாக யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் அரச நிதி பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதான அலுவலகம் மற்றும் 16 பிரதேச அலவலகங்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் தொடர்பாக பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2017 யூன் 28 ஆந் திகதிய திறைசேரி செயலாளரால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | கம்பனியால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.7 வாகன பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்பட்ட 18 வாகனங்களில் 09 வாகனங்கள் ஓட்ட நிலைமையில் காணப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் ஓட்ட நிலைமையில் காணப்படாத வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அரசாங்க நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 13.2 இன் பிரிவின் பிரகாரம் விற்று தீர்ப்பதற்கோ கம்பனியால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாகன இல. 227-3173 ஆம் இலக்க லொறி வண்டி 2014 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் விரைவாக விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக துருப்பிடித்த நிலையில் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொருள் மெய்மையாய்வு சபை பரிந்துரையின் படி தாமதமின்றி விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 251-9413 என்ற கெப் வண்டியை பழுதுபார்ப்பதற்காக 2019 யூலை 23 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு ரூபா 512,375 முற்பணமாக சேவை வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்க்காமல் நிறுவனத்தின் சுற்றாடலில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து குறித்துரைத்த நட்டத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செலுத்தப்பட்ட முற்பண தொகையை மீண்டும் அறவிடுவதற்கோ அல்லது பழுதுபார்க்க கூடிய நிலைமையில் காணப்படுமாயின் அதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) கிரயம் ரூபா 05 மில்லியன் ஆக KH-5590 என்ற கார் 2022 சனவரி 22 ஆம் திகதி கொழும்பில் இருந்து கிரியுல்லைக்கு செல்லும் போது ஏற்பட்ட திடீர் விபத்திற்கு உட்பட்டிருந்தாக சாரதியால் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், அந்த பிரயாணத்தின் கடமை ரீதியானதா என வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அது தொடர்பாக பொலிஸ் அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. விபத்தினால் வாகனத்திற்கு முழுமையாக நட்ட இழப்பு ஏற்பட்டிருந்ததுடன், விபத்து ஏற்பட்டு ஒரு ஆண்டிற்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 வரையிலும் காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஆவணங்கள் சமர்ப்பித்தலில் தாமதத்தின் காரணமான பிரச்சினை நிலைமையினைத் தீர்த்து விரைவாக காப்புறுதி இழப்பீட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது அவ்வாறில்லையாயின் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறவிடல் வேண்டும். |

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 செப்டம்பர் 27 ஆம் திகதி பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 21/0084/302/002 என்ற அமைச்சிரவை குறிப்பில் 2021 ஒக்டோபர் 26 ஆம் திகதி இலக்கம் அமப21/1779/302/002/-1 அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபார்த்தல் மற்றும் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்பாடுகள் கட்டிட பொருட்களை வழங்கும் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இதற்காக ஆரம்ப மதிப்பீடு, தேவையான பொருட் பட்டியல், தேவையான அளவு தொடர்பாக விபரங்கள் மற்றும் பொருள் வழங்குதலின் நிபந்தனை, பணம் செலுத்துதல் போன்ற விடயங்களை உள்ளடக்கி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.<br>கம்பனியால் கணக்காய்விற்காக | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செலவின அறிக்கையை சரியாக தயாரிக்க வேண்டியிருந்ததுடன், பெற வேண்டிய பணத்தை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்ட செலவின அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக்களை உள்ளடக்கி 2022 நவம்பர் 23 ஆம் திகதி வரையில் கம்பனியால் உத்தியோகபூர்வ இல்லத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 267,354,550 ஆக இருந்தது. இதில் ரூபா 9,976,896 பெறுமதியான வளிப்பதனாக்கி இயந்திரம், கேஸ் லைன் வைபை முறைமை போன்ற கம்பனியால் வழங்கப்படுகின்ற கட்டிடப் பொருட்களுக்கு உரித்தற்ற வகையின் வழங்கல்களும் செய்யப்பட்டிருந்தன. மேலும் கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் ரூபா 10,391,979 ஆன செலவினங்கள் இதில் உள்ளடக்கப்படாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது. 2023 மார்ச் 23 ஆம் திகதி வரையில் பிரதமர் அலுவலகத்தினால் தீர்த்து வைக்கப்பட்ட தொகை ரூபா 177,122,701 ஆக இருந்ததுடன், அதன் பிராகரம் மேலும் அறவிட வேண்டிய பணம் ரூபா 90,231,848 ஆக இருந்தது.

மேலும் மேற்கூறப்பட்ட பழுதபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தேவையான இல்ல ஆய்வு, சிவில் பொறியியலாளர் ரீதியான மற்றும் உள்ளக நிர்மாணங்கள் தொடர்பாக ஆலோசனை சேவை நடவடிக்கை கம்பனியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், அவ்வாறான சேவைகளை வழங்குதல் கம்பனியின் சாதாரண வியாபார நடவடிக்கை அல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் கம்பனியால் இதற்காக வெளி நபர் ஒருவர் அந்த நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் எந்தவொரு பெறுகை நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் சேவை சேவை நிபந்தனைகளை உள்ளடக்கி எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் 23 ஆம் திகதி வரையில் ரூபா 13,073,187 தொகை அதற்காக

கருத்து தெரிவிக்கப்படவில்லை.

கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்றுவதற்கும் வாடிக்கையாளர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்த போதிலும், பிரதமர் அலுவலகத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்ட தொகை ரூபா 10,000,000 மாத்திரமாக இருந்ததுடன் மேலும் மீளளிப்பு செய்ய வேண்டிய தொகை ரூபா 3,073,187 ஆக இருந்தது. | | |
| (ஆ) | இந்த பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புக்களுக்கு உரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம், பொருள் கட்டளையிடல் பத்திரம், பொருட்களை கொள்வனவு செய்யும் பத்திரம், பொருள் பெறுவனவு குறிப்பு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்படாமை மற்றும் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் உரிய தரப்பினருக்கு சரியான பிரகாரம் கையளிக்கப்பட்டதா எனவும், வெளித்தரப்பினருக்கு பொருட்கள் வழங்குவதன் மூலம் கம்பனியின் சராசரியான முறைமையின் பிரகாரம் பெறவேண்டிய இலாப வீதம் சரியான பிரகாரம் பெறப்பட்டிருந்தா எனவும் உறுதிப்படுத்துவதற்கு உரிய கடன் பட்டியல் மற்றும் உரிய கொள்வனவு கட்டளையின் தொடர்பு இலக்கம் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொருட்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டிய முறையில் துணை ஆவணங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**2.9 நோக்கத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் இறக்குமதி வரையரையினால் சந்தைகளில் காணப்பட்ட டைல் பற்றாக்குறையை குறைக்கும் நோக்கில் 2021 யூன் 11 ஆம் திகதிய 2231/18 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் செரமிக் டைல் நிறுவனத்தின் டைலை இறக்குமதி செய்யும் அங்கீகாரம் இந்த கம்பனிக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கான நிதி வலு கம்பனியிடம் காணப்படாமையின் காரணமாக பகிரங்க அறிவித்தல்களை பிரசுரித்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அந்த செயற்திட்டத்தில் ஈடுபட்டிருந்த 11 நிறுவனங்களுடன் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வர்த்தமானியின் நோக்கங்களுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |

“BMC” பெயரின் கீழ் செரமிக் டைல் இறக்குமதி செய்வதற்கும் மற்றும் 10 சதவீத இலாப எல்லை கம்பனிக்கு கிடைக்கும் வகையில் BMC கடைகளில் விற்பனை செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 செப்டம்பர் மாதம் முதல் 2022 செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ரூபா 868,121,891 (அ.டொலர் 3,202,828) பெறுமதியுடைய 460 டைல் கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அந்த செரமிக் டைல் இறக்குமதி செய்து பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளில் அவதானிப்புக்கள், மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்களுக்காக வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் மேம்பாட்டு அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஐந்து பேர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய குழுவின் சரியான மேற்பார்வையொன்று காணப்படாமையின் காரணமாக இறக்குமதியில் சந்தையில் டைல் பற்றாக்குறையை குறைத்தல் மக்களின் சிறிய அளவிலான நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு நலனாக இல்லாதிருந்ததுடன், நிர்மாண துறையில் பாரிய அளவிலான செயற்திட்டங்களில் வரையரையுடன் மாத்திரம் மேற்கொள்ள வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.10 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘நியமத்திற்கு இணங்க உயர்ந்த தரத்தினையுடைய கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போட்டியாளர் விலைக்கு நாடு முழுவதும் வழங்குதலை முன்னுரிமைப்படுத்துதல் மற்றும் அரச நிறுவனமொன்றாக சமூக பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் இலங்கை மக்களுக்கு ஆகக்கூடிய நம்பிக்கையினை கட்டியெழுப்புதல்’’ நிறுவனத்தின் தூரநோக்காகும். எனினும் தற்போது வரையிலும் பிரதான அலுவலக வளவில் நடாத்திச் செல்லப்படுகின்ற நவீனமயப்படுத்தப்பட்ட காட்சிக்கூடம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனியின் நோக்கம் மற்றும் பணிக்கூற்றின் பிரகாரம் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் செயற்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. |

| | | |
|---|---|---|
| மற்றும் கிளை அலுவலகங்களில் தனியார் கட்டிட உபகரணங்கள் வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கட்டிட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இலாப எல்லையுடன் விற்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து காணப்பட்டது. அதன் பிரகாரம் கம்பனி தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் கம்பனியின் தூர நோக்குகளை மேவுகை செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட 2013 முதல் 2017 வரையான 05 வருடங்களின் போதும் தேறிய நட்டம் ரூபா 15 மில்லியன் முதல் ரூபா 86 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | | |

**2.11 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கம்பனிக்கு எதிராக நீதிமன்றத்தில் 06 வழக்குகள் விசாரணையில் காணப்பட்டதுடன், 2022 யூன் 30 ஆம் திகதி வரையில் நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் கம்பனியால் ரூபா 21,762,385 தொகை செலுத்த வேண்டி காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனிக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை குறைக்கும் வகையில் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.12 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1964 இன் 28 ஆம் இலக்க காணி கைப்பற்றல் சட்டத்தின் பிரகாரம் 1974.09.09 ஆம் திகதி அரசாங்கத்திற்குரிய காணி 1.1157 ஹெக்டேயர் மற்றும் 3.2 ரூட் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய காணி கம்பனிக்கு கையளித்தல் சான்றிதழ் பத்திரத்தின் பிரகாரம் இந்த காணி உரிய அமைச்சின் சரியான அங்கீகாரம் இன்றி கைப்பற்றப்பட்ட பணிகள் தவிர ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக உரிய காணியில் 04 ரூட் 31.4 பேர் அளவான 03 காணிக்கூறுகள் 2005 நவம்பர் 14 ஆம் திகதி, 2007 சனவரி 24 மற்றும் 2005 ஆகஸ்ட் 14 ஆம் திகதிகளில் HDFC ரியல் எஸ்டேட் டெவலப்மன்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணிப்பாளர் சபையின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையான அங்கீகாரம் இன்றி காணி விற்பனை செய்ய முடியாதிருந்ததுடன், கம்பனிக்கு சொந்தமான சொத்துக்கள் உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்வதை கண்காணித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தில் ரூபா 222.50 மில்லியன் தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும், 2012 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 359.32 மில்லியன் தொகை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தி காணிகளின் உரித்தை விடுவித்துக் கொள்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதும் கம்பனி அதன் பிரகாரம் பணத்தை செலுத்தி காணிகளின் உரித்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1998 நவம்பர் 09 ஆம் திகதி கம்பனியால் இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு 12 இல் அமைந்துள்ள கம்பனிக்கு சொந்தமான 100 பேர்ச் அளவான காணி இலங்கை வங்கிக்கு ரூபா 70 மில்லியன் பிணை முறியின் மூலம் கையளிக்கப்பட்டிருந்தமை கம்பனியால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. பின்னர் கம்பனியால் 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதி திறைசேரி பிணையின் அடிப்படையில் இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் மேற்கூறப்பட்ட விற்பனைக்குரிய பணமான ரூபா 70 மில்லியன் தொகை மற்றும் வட்டி தொகையையும் உள்ளடக்கி அத்திகதியில் காணப்பட்ட மேலதிகப் பற்று மீதியுடன் செலுத்த வேண்டிய ரூபா 199,052,329 தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காணியை மீண்டும் கம்பனிக்கு கையேற்பதற்காக வங்கியால் தயாரிக்கப்படிருந்த முன்னாள் உரித்துறுதியின் பெறுமதிக்குரிய முத்திரைக் கட்டணமான ரூபா 5,383,174 தொகை செலுத்தி மீண்டும் காணி கையேற்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், கையேற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய முத்திரைக் கட்டணத்தை சரியான பிரகாரம் செலுத்தி காணியின் உரித்தை கையேற்பதற்கு முகாமைத்துவம் கண்காணித்தக் கொள்ளல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 417/ஏ, கடை வீதி கிழக்கு, புகையிரத நிலைய வீதி, மாத்தறை என்ற காணியில் 01 றூட், 2.8 பேர்ச் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் எந்தவொரு வாடகையும் செலுத்தாமல் பலவருட காலம் முதல் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுவதுடன் கம்பனி அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | அரசாங்க நிறுவனம் என்ற வகையில் முகாமைத்துவத்தால் ஒன்றிணைந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளோ எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கம்பனியின் கீழ் உள்ள 03 ஏக்கர், 03 றூட், 37 பேர்ச் அளவான காணி, ஓய்வு விடுதி, களஞ்சியம் மற்றும் 05 வீடுகளுக்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உரித்துறுதியை பெற்றுக் கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய ஆதனங்கள் தொடர்பாக உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கம்பனிக்குரிய 04 ஏக்கர் 29.1 பேர்ச் அளவான 07 காணிகள் மற்றும் 05 வீடுகளுக்காக நிலஅளவையாளர் திட்டம் தயாரிக்கப்படடிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனிக்குரிய காணி மற்றும் கட்டிடங்களுக்காக நிலஅளவையார் வரைபட திட்டத்தை தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய இலக்கம் அமப/19/2192/122/076 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இலக்கம் 549/A, பொருப்பன, மொரட்டுவையில் அமைந்துள்ள காணியின் உரித்து கம்பனிக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட போதும், கம்பனியால் காணியின் உரித்துறுதி தயாரித்து உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரித்துறுதியை தயாரித்து பதிவு செய்து கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கம்பனிக்கு சொந்தமான யாழ்ப்பாணம், உப்புக்குளம் கரை குன்குனியாரில் அமைந்துள்ள 01 றூட் 31.6 பேர்ச் காணி, அநுராதபுரம் பண்டுகம வீடமைப்பு, நுவரெலிய வம்பரகெலே கட்டிடம், எம்பிலிப்பிட்டிய யோதகம 02 வீடுகள் என்பன பல வருட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது.<br><br>மேலும் மாத்தறை லங்கா சதொச விற்பனை நிலையத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட கம்பனிக்கு சொந்தமான கட்டிடம் ஒன்று 2019 யூலை மாதம் முதல் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்று காணப்பட்டதுடன், மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | காணப்படுகின்ற வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | தேசிய லொத்தர் சபையின் சேவை நடவடிக்கைகளுக்காக இல. 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கூட்டுத்தாபன கட்டிடத்தில் களஞ்சிய இலக்கம் 1 முதல் 7 வரையான 7 களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை மதிப்பீடு செய்து முறையாக உடன்படிக்கை கைச்சாத்திட்டு கட்டடத்தை வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புதுப்பிக்கப்படாமல் 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட விலையிலேயே 2021 ஆம் ஆண்டு வரை அந்தக் களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்தக் களஞ்சியத்திற்காக 2018 யூலை முதல் 2021 சனவரி வரை செலுத்த வேண்டிய ரூபா 60,382 தொகையான மின்சார பட்டியல் தேசிய லொத்தர் சபையினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | 2015 ஏப்ரல் முதல் ஒரு சதுர அடி ரூபா 45 வீதம் 1,480 சதுர அடி அளவான இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் கம்பனி வளவில் கம்பனிக்கு சொந்தமான களஞ்சியமொன்று ரூபா 66,600 மாதாந்த வாடகையில் நபர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கை காலம் 2017 ஏப்ரல் 09 ஆம் திகதி முடிவடைந்திருந்ததுடன், புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் இனங்கப்பட்ட வாடகைத் தொகையின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் அந்த களஞ்சியம் மீண்டும் அந்த நபருக்கே வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் வாடகை அளவினை நாளது வரையாக்கி களஞ்சிய வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (ஒ) | தேசிய இளைஞர் படையணி (National Youth Corps) நிறுவனத்திற்கு மாதமொன்றிற்கு ரூபா 164,850 தொகையில் வழங்கப்பட்டிருந்த மாளிகாவ வீதி, இரத்மலானையில் அமைந்துள்ள கட்டிடம் 2019 ஒக்தோபர் மாதம் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த நிறுவனத்தின் மின்சார மற்றும் நீர் கட்டண பட்டியல்களுக்காக அறவிடவேண்டியிருந்த ரூபா 10,532 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | விளைவற்ற சொத்துக்கக் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 2.13 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 12 வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்றது. எனினும், 2021 ஆம் ஆண்டிற்காக சரியாக ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை குறிப்பிட்டு காசேடு பேணிச் செல்லப்பட்டிருக்காதுடன். வங்கி கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வங்கி கணக்கு மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 05 வங்கிக் கணக்குகளில் வரவு மீதி ரூபா 44,544,272 ஆக இருந்ததுடன், 04 கணக்குகளில் செலவு மீதி ரூபா | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மிகவும் சரியாக கணிப்பீடு செய்யப்பட்ட ஆரம்ப மீதி அல்லது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்று மாதாந்தம் தாயரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் |

| | | |
|---|---|---|
| 209,909,046 ஆகும். 03 வங்கி கணக்குகளின் மீதியை உறுதிப்படுத்தல் சமா்ப்பிக்கப்படவில்லை. இதனால் கம்பனி போதியளவான பிரகாரம் நிதி தொடர்பான நிர்வாகத்தை அமுல்படுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அது நிதி முகாமைத்துவம் தொடர்பாக அவர்களின் பொறுப்பாகவும் உள்ளது. |

## 3. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ/12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கீழே குறிப்பிடப்பட்ட பிரிவுகளின் பிரகாரம் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| i. 9.2(ஆ) பந்தியின் பிரகாரம் கம்பனிக்காக தேவையான பதவியணியினரை தீர்மானித்து அதற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| ii. 9.3.1(i) பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று கம்பனியிடம் காணப்படவில்லை. | | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் தூரநோக்கு மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு இணைந்ததாக செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு 15 தினங்களுக்கு முன்னர் உரிய திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |